விரைவு நீதிமன்றம் (ந.வ), உத்தமபாளையம்

முன்னிலை: திரு.S.அமலநாத கமலக்கண்ணன், B.A.,B.L.,Hon's.,
நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம்,
உத்தமபாளையம்.

2026–ஆம் ஆண்டு மே திங்கள் 29–ஆம் நாள் வெள்ளிக்கிழமை

சுருக்குமுறை ஆவண வழக்கு எண்.255/2025

CNR.No.TNTH080000082025

புகார்தாரர்	மு.காசிமாயன் (வயது 49/2026), த/பெ.முத்துக்கலுவன், வார்டு–22, ஒட்டார் தெரு, கூடலூர், உத்தமபாளையம் தாலுகா, தேனி மாவட்டம்.
எதிரி	ஜா.பிஜீ ஜான் (வயது 54/2026), த/பெ.ஜான், எண்.4–300, பீழமட்டம் ஹவுஸ், சக்குபள்ளம், செல்லார்கோவில் போஸ்ட், இடுக்கி மாவட்டம், கேரளா மாநிலம்.
குற்றம் முறையிட்டது	மாற்று முறை ஆவணச் சட்டம் பிரிவுகள் 138, 142–ன் கீழ்
காசோலை எண். (256966)	25.09.2024
காசோலை தொகை	Rs.5,00,000/-
வசூலுக்கு தாக்கல் செய்த நாள்	25.09.2024
காசோலை திரும்பிய நாள்	26.09.2024
காசோலை திரும்பிய காரணம்	Funds Insufficient
அறிவிப்பு அனுப்பிய நாள்	24.10.2024
அறிவிப்பு திருப்பப்பட்ட நாள்	11.11.2024
வழக்கு தாக்கல் நாள்	06.01.2025
தீர்ப்பு நாள்	29.05.2026
புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர்	திரு.T.செல்லப்பாண்டி
எதிரி தரப்பு வழக்கறிஞர்	திரு.M.சுரேஷ்குமார்

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 12:27:19 +0530

தீர்வு	எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138–ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து B.N.S.S பிரிவு 278(2)–ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

<u>தீர்ப்புரை</u>

1. <u>புகார்தாரர் வழக்கு சுருக்கம்:</u>

புகார்தாரருக்கும், எதிரிக்கும் இருந்துவந்த பழக்கவழக்கத்தின் அடிப்படையில், எதிரி அவரது அவசர தேவைக்கும், குடும்ப செலவிற்காகவும், சில்லரை கடன்களை தீர்ப்பதற்காகவும், வேண்டி புகார்தாரரிடம் கைமாற்று கடனாக பணம் கேட்டுள்ளார். புகார்தாரர் கடந்த 28.07.2024ம் தேதி ரூ.5,00,000/–ஐ தனது வீட்டில் வைத்து எதிரிக்கு ரொக்கமாக கொடுத்துள்ளார். அதற்கு ஆதரவாக 25.09.2024 நாளிட்ட 256966 என்ற எண் கொண்ட பெடரல் வங்கி, புத்தடி கிளைக்குரிய ரூ.5,00,000/–த்திற்கான காசோலையை கொடுத்துள்ளார். அந்த காசோலையை பணமாக்கும் பொருட்டு புகார்தாரர் தான் கணக்கு வைத்துள்ள கனரா வங்கி, கூடலூர் கிளையில் 25.09.2024ம் தேதியன்று வசூலுக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி காசோலையானது "Funds Insufficient" என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 26.09.2024 அன்று திரும்பியது. காசோலை தொகையை கேட்டு எதிரிக்கு 24.10.2024 நாளிட்டு அனுப்பிய சட்ட அறிவிப்பு 11.11.2024ம் தேதி திருப்பப்பட்டு, பின்னர் சரியான முகவரியுடன் 13.11.2024ம் தேதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை 23.11.2024ம் தேதியன்று திருப்பி அனுப்பி, பணம் செலுத்தாமல் இருந்துள்ளார். மேலும் எதிரி காசோலையின் தொகையை செலுத்தாமல் புகார்தாரரை மோசடி செய்து ஏமாற்றும் நோக்கத்துடன் செயல்பட்டதால் எதிரி மாற்றுமுறை

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 12:27:25 +0530

ஆவணச்சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 142ன் கீழ் குற்றம் இழைத்துள்ளார் என்பதால் எதிரியை தண்டிக்க வேண்டி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

2. புகார்தாரர் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம், புகார்மனு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் எதிரிக்கு எதிராக வழக்கு விசாரணைக்கு உத்தரவிட முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் எதிரிக்கு பிரிவு 227 B.N.S.S–ன் கீழ் அழைப்பாணையுடன் இணைத்து புகார் நகல் அனுப்பப்பட்டது.

3. எதிரி அழைப்பாணையையும், புகார் நகலையும் பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரியிடம் B.N.S.S பிரிவு 274–ன் படி குற்றத்தின் சாரம்சம் குறித்து கேள்வி கேட்கப்பட்டது "பொய் குற்றச்சாட்டு" என்றும், எதிரிக்கு புகார்தாரரை தெரியாது என்றும், எதிரி குற்றத்தை மறுத்து விசாரணை செய்ய வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

4. <u>புகார்தாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

புகார்தாரர் திரு.காசிமாயன் தனது புகாரில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து அது ம.சா.1 முதல் விசாரணை சாட்சியமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரி கொடுத்த 25.09.2024–ம் தேதியிட்ட 256966 என்ற எண் கொண்ட பெடரல் வங்கி, புத்தடி கிளைக்குரிய ரூ.5,00,000/–க்கான அசல் காசோலை ம.சா.ஆ.1 என்றும், மேற்படி காசோலை "Funds Insufficient" என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 26.09.2024ம் தேதியன்று திரும்பியதற்கான வங்கி குறிப்புரை அசல் ம.சா.ஆ.2 என்றும், மேற்படி காசோலைக்குரிய தொகையை கேட்டு எதிரிக்கு அனுப்பிய 24.10.2024 நாளிட்ட சட்ட அறிவிப்பின் அசல் ம.சா.ஆ.3 என்றும், மேற்படி அறிவிப்பை எதிரி 23.11.2024ம் தேதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பியதற்கான அஞ்சலக உறை அசல் ம.சா.ஆ.4 என்றும், புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பானது Insufficient Address என்று திருப்பப்பட்டுள்ளது

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 12:27:32 +0530

ம.சா.ஆ.5 என்று மேற்படி ஆவணங்களை முக்கிய சான்றாவணங்களாக ம.சா.1 குறியீடு செய்துள்ளார்.

5. <u>பிரிவு 351(1)(b) வினா மற்றும் பதில்:</u>

புகார்தாரர் தரப்பில் விசாரிக்க கூடுதல் சாட்சியம் இல்லை என மேற்குறிப்பு செய்ததால் புகார்தாரர் தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக உள்ள அம்சங்களை தொகுத்து BNSS பிரிவு 351(1)(ஆ)–ன் கீழ் வினவிய போது புகார்தாரர் தரப்பு சாட்சியத்தை பொய் சாட்சியம் என்றும், ம.சா.ஆ.1–ஆன காசோலை தன்னுடையதுதான் என்றும், அதிலுள்ள கையொப்பமும் தன்னுடையது தான் என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சி உள்ளது என்றும் கூறினார்.

6. <u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

எதிரி தனது சாட்சியத்தில், புகார்தாரரை எதிரிக்கு தெரியாது என்றும், 2018 ல் சிபி ஜோசப், கொட்டுப்பள்ளி என்பவரிடம் ரூ.1 லட்சம் மாதம் ரூ.4000/– வட்டி வீதம் வாங்கினேன் என்றும், எனது வாகனத்தின் ஆர்.சி. புத்தகம் மற்றும் தாவா காசோலையை கையொப்பம் மட்டும் செய்து நிரப்பாமல் சிபி ஜோசப் என்பவரிடம் கொடுத்திருந்தேன் என்றும், 2023 ல் எதிரி சிபி ஜோசப் என்பவரிடம் ரூ.1 லட்சம் கொடுத்துவிட்டு காசோலையை கேட்டபோது அவர் தரவில்லை என்றும், பின்பு தனது காசோலையை வைத்து காசிமாயன் பொய்வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், புகார்தாரர் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பின்பு கட்டப்பணை S.P அலுவலகத்தில் சிபி ஜோசப் மீது புகார் கொடுத்துள்ளேன் என்றும், மேற்படி S.P அலுவலகத்திலிருந்து சிபி ஜோசப்பை விசாரித்தபோது இந்நீதிமன்றத்தில் வழக்கு நடப்பதாகவும், அதனால் வரமுடியாது என்று கூறிவிட்டார் என்றும், புகார்தாரரிடம் எனது காசோலை எப்படி வந்தது என்று எனக்கு தெரியாது என்றும், புகார்தாரரிடம் நான் பணம் வாங்கியதில்லை

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 12:27:38 +0530

என்றும், எதிரி சிபி ஜோசப் என்பவர் மீது கொடுத்த எ.சா.ஆ.1 புகார்மனு மற்றும் எ.சா.ஆ.2 ரசீதை தாக்கல் செய்கிறேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7. <u>புகார்தாரர் தரப்பு வாதம்:</u>

புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், புகார்தாரர் அவரது சாட்சியத்தின் மூலமும், ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் மூலமும், எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என வாதம் முன்வைத்துள்ளார். ம.சா.ஆ.1 ஆன காசோலையும், அதிலுள்ள கையொப்பமும் தன்னுடையதுதான் என்று எதிரி ஒப்புக்கொண்டுள்ளதால், மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் அனுமானங்கள் புகார்தாருக்கு ஆதரவாக உள்ளது. புகார்தாரர் மீது எதிரி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பினை பெற்றுக்கொள்ளவில்லை. காசோலையை பொறுத்து வங்கியில் Stop payment செய்யும்படி நடவடிக்கை எடுக்கவில்லை. புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் அனுமானங்கள் எதிரி தரப்பில் மறுக்கப்படவில்லை என்றும், எனவே எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்ற வாதத்தினை முன்வைத்தார்.

8. <u>எதிரி தரப்பு வாதம்:</u>

எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், புகார்தாரரிடம் எதிரி ரூ.5,00,000/– கடனாக வாங்கவில்லை. எதிரிக்கு புகார்தாரரை தெரியாது. 2018ல் சிபி ஜோசப் என்பவரிடம் வாங்கிய ரூ.1லட்சம் வட்டி கடனுக்கு ஆதரவாக கொடுத்த காசோலையை வைத்து புகார்தாரர் பொய்வழக்கு தாக்கல் செய்துள்ளார். புகார்தாரர் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகு சிபி ஜோசப் மீது கட்டப்பனை காவல் நிலையத்தில் எதிரி புகார் கொடுத்துள்ளார். காசோலையை தவிர்த்து வேறு எந்த ஆவணங்களையும் புகார்தாரர் தாக்கல் செய்யவில்லை. புகார்தாரருக்கு காசோலை தொகை கொடுக்கும் அளவிற்கு வசதி வாய்ப்பு இல்லை. எதிரி காசோலை தொகையை செலுத்த கடமைப்பட்டவர் இல்லை.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 12:27:45 +0530

ஆகையால் புகார்தாரருக்கு ஆதரவாக இருப்பதாக கூறப்படும் அனுமானங்கள் மறுக்கப்பட்டுள்ளது என்பதால் எதிரிக்கு எதிராக பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் தண்டிக்க இயலாது என்ற வாதத்தை முன்வைத்தார்.

9. சான்றாவணங்கள் மற்றும் இதர வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு கருத்தில் எடுத்து கொள்ளப்பட்டது.

10. இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றமான மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138-ன் படி சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பது தீர்விற்குரிய பிரச்சனையாகும்.

10.1. எதிரி மீதான குற்றத்தை நிரூபிக்க பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் உட்கூறுகள் நிரூபிக்கப்பட்டிருக்க வேண்டும்.

- முதலில் எதிரி, புகார்தாரருக்கு 25.09.2024-ம் தேதியிட்டு ரூ.5,00,000/-க்கு கொடுத்த பெடரல் வங்கி, புத்தடி கிளை ம.சா.ஆ.1 காசோலையானது உரிய காலத்திற்குள் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

- மேற்படி காசோலையானது கடந்த 26.09.2024ம் தேதியன்று Funds Insufficient என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு கனரா வங்கி, கூடலூர் கிளையிலிருந்து திருப்பப்பட்டது என்பது ம.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

- காசோலை திரும்பியது குறித்து 24.10.2024-ம் தேதியன்று புகார்தாரர் அவரது வழக்கறிஞர் மூலம் உரிய காலத்திற்குள் எதிரிக்கு "Biju john S/o.John, 4/300, Pillamatham House, Chakkupallam, Chellar Kovil Post, Idukki District, Kerala. என்ற முகவரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேற்படி அறிவிப்பபானது Insufficient Address என்ற காரணம் குறிப்பிட்டு 11.11.2024ம் தேதியன்று திருப்பப்பட்டுள்ளது. பின்பு 13.11.2024ம் தேதியன்று புகார்தாரர் "Biju john S/o.John, 4/300, Pezhamattam House, Chellar

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 12:27:53 +0530

Kovil Post, Idukki District, Kerala. என்ற முகவரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேற்படி முகவரியானது Refused என்ற காரணம் குறிப்பிட்டு திருப்பப்பட்டுள்ளது. புகார்தாரர் அனுப்பிய முதல் அறிவிப்பானது போதிய முகவரி இல்லை என குறிப்பிட்டு திருப்பப்பட்டாலும், இரண்டாவது முறை சரியான முகவரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பானது அனுப்பப்பட்டுள்ளது. மேலும் புகார்தாரர் அனுப்பிய முதல் அறிவிப்பின் முகவரிக்கும், இரண்டாவது அறிவிப்பின் முகவரிக்கும் சிறிய வித்தியாசங்கள் மட்டுமே உள்ளது என்பதால் புகார்தாரர் வேண்டுமென்றே தவறான முகவரிக்கு முதல் அறிவிப்பு அனுப்பவில்லை என்று முடிவு செய்கிறது.

அதன்பின்னர் எதிரி 15 நாட்களுக்குள் பணம் செலுத்தாமல் இருந்ததால் உரிய காலத்திற்குள் புகார்தாரர் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

10.2. <u>தற்போது தாவா காசோலையானது எதிரியின் காசோலைதானா? என்றும், எதிரி தன்னுடைய சட்டப்படியான கடனை தீர்க்க தான் புகார்தாரருக்கு தாவா காசோலையை கொடுத்தாரா?</u> என்பதை பரிசீலனை செய்கையில், தாவா காசோலையானது எதிரியின் காசோலைதான் என்றும், அதிலுள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்று அவர் ஒப்புக்கொண்டுள்ளார். எனவே மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 118 (a)-ன்படி வழக்கு காசோலை மறுபயனுக்காகத்தான் கொடுக்கப்பட்டுள்ளது என்று புகார்தாரருக்கு ஆதரவாக அனுமானம் நிலவுகிறது. மேலும், <u>K.Bhaskaran Vs. Sankaran Vaidhyan Balan (1999 (4) RCR (Criminal) 309)</u> என்ற மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி, எதிரி காசோலையில் உள்ள கையொப்பத்தை மறுக்கப்படவில்லை என்பதால் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 139-ன் படி காசோலையானது சட்டப்படியான கடனை தீர்ப்பதற்காக கொடுக்கப்பட்டதுதான் என்று புகார்தாரருக்கு ஆதரவாக அனுமானம் நிலவுகிறது.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 12:28:01 +0530

10.3. மேற்கண்ட அனுமானங்கள் புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் பட்சத்தில் எதிரி தரப்பில் மறுக்ககூடிய அனுமானங்கள் ஆகும். Basalingappa Vs mudibasappa என்ற மாண்புமிகு உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி எதிரி தனது தரப்பு சாட்சியங்களை முன் நிறுத்துவதன் மூலமாகவோ அல்லது புகார்தாரர் சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தோ Pre-Ponderance of probability என்ற அடிப்படையில் தனது தரப்பிற்கு ஆதரவாக எதிர்வாதத்திற்குரிய சந்தேகத்தை ஏற்படுத்துவதன் மூலம் மறுக்கலாம்.

10.4. மேற்படி அனுமானங்கள் புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் நிலையில், எதிரி தரப்பில் இருந்து மறுக்கப்படும் சங்கதிகள் யாதெனில்,

"எதிரி ரூ.5,00,000/- கடன் வாங்கவில்லை என்றும், எதிரிக்கு புகார்தாரரை தெரியாது என்றும், சிபி ஜோசப் என்பவரிடம் பெற்ற ரூ.1 லட்சம் வட்டி கடனுக்கு ஆதரவாக எதிரி கொடுத்த காசோலையை வைத்து புகார்தாரர் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்" என்று புகார்தாரரின் வழக்கினை மறுக்கப்பட்டுள்ளது.

10.5. புகார்தாரர் அவரது நிரூபண சாட்சியத்தில், எதிரியின் அவசர தேவைக்கும், குடும்ப செலவிற்காகவும், சில்லரை கடன்களை தீர்க்கவும் கடன் கொடுத்ததாக கூறியுள்ளார். மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக எதிரி தாவா காசோலையை கொடுத்தார். அதனை வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தபோது பணம் வசூலாகாமல் Funds Insufficient என காரணம் குறிப்பிட்டு காசோலையானது திருப்பப்பட்டது.

10.6. புகார்தாரரின் வழக்கை நிரூபிக்கும் வகையில், ம.சா.ஆ.1 ஆன எதிரியின் தாவா காசோலையை புகார்தாரர் தாக்கல் செய்துள்ளார். தாவா காசோலை வங்கியிலிருந்து மறுக்கப்பட்ட பின்னர் புகார்தாரர் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். அதனை எதிரி பெற்றுக்கொள்ளாமலும், பதில் அறிவிப்பு அனுப்பாமலும் இருந்துள்ளார். மேலும் இவ்வழக்கு சம்மந்தமாக

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 12:28:10 +0530

எதிரியிடம் முதல் கேள்வி மற்றும் 351(1)(b)–ன் கீழ் கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் மறுப்பு தெரிவித்துள்ளார்.

10.7. எதிரி தானாக முன்வந்து தன்னை எ.சா.1 ஆக விசாரணை செய்துள்ளார். எதிரி அவரது முதல்விசாரணயில், புகார்தாரரை தெரியாது என்றும், 2018 ல் சிபி ஜோசப் என்பவரிடம் ரூ.1 லட்சம் மாதம் ரூ.4000/– வட்டி வீதம் வாங்கியதற்கு ஆதரவாக எதிரி கொடுத்த காசோலையை வைத்து புகார்தாரர் பொய்வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், புகார்தாரர் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பின்பு கட்டப்பணை காவல் நிலையத்தில் சிபி ஜோசப் மீது எதிரி புகார் கொடுத்திருப்பதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

10.8. மேற்படி விபரங்களை குறிப்பிட்டே புகார்தாரரின் குறுக்கு விசாரணையில் எதிரி தரப்பில் மறுக்கப்பட்டுள்ளது. ஆனால் சிபிஜோசப் என்பவரை தெரியாது என்று புகார்தாரர் சாட்சியம் அளித்துள்ள நிலையில், புகார்தாரருக்கும், சிபிஜோசப் என்பவருக்கும் இடையே பழக்கம் உள்ளது என்பதை நிரூபிக்கும் சுமையானது எதிரிக்கே உள்ளது. ஆனால் புகார்தாரருக்கும், சிபிஜோசப் என்பவருக்கும் இடையே பழக்கம் உள்ளது என்பதை நிரூபிக்கும் வகையில் எதிரி தரப்பில் எவ்வித சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை முன்னிறுத்தவில்லை.

10.9. மேலும் நீதிமன்ற அழைப்பாணை பெற்ற பின்பு சிபி ஜோசப் மீது கட்டப்பணை காவல் நிலையத்தில் எதிரி புகார் கொடுத்ததாக கூறி புகார் மனு மற்றும் அதன் இரசீதை எ.சா.ஆ.1 மற்றும் எ.சா.ஆ.2 ஆக எதிரி குறியீடு செய்துள்ளார். சிபிஜோசப் என்பவரிடம் எதிரி 2018 ல் கடன் பெற்று 2023 ல் திருப்பி கொடுத்ததாக கூறும்பட்சத்தில், நீதிமன்ற அழைப்பாணை வருவதற்கு முன்பு வரை எதற்காக எதிரி காசோலையை திரும்ப பெறுவதற்கு சிபிஜோசப் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்பதை குறித்து அவரது தரப்பில் எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 12:28:17 +0530

10.10. மேலும் எதிரி கொடுக்க வேண்டிய முழு தொகையையும் சிபிஜோசப்பிடம் திருப்பி கொடுத்ததாக கூறும்பட்சத்தில் காசோலையை பொறுத்து Stop payment செய்வதற்கு எதிரி நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால் மேற்படி நடவடிக்கையை எதிரி எதற்காக எடுக்கவில்லை என்பதை குறித்து அவரது தரப்பில் எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை. மேற்கண்ட நடவடிக்கைகளை எதிரி எடுக்காமல் நீதிமன்ற அழைப்பாணை கிடைத்த பின்பு சிபிஜோசப் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ள காரணத்தினால் மட்டுமே புகார்தாரரின் வழக்கின் மீது சந்தேகம் எழவில்லை என்று முடிவு செய்கிறது.

10.11. மேலும் எதிரி எந்த தேதியில், எங்கு வைத்து, யார் முன்னிலையில் சிபிஜோசப்பிடம் பணம் வாங்கினார் என்றும், எந்த தேதியில், எங்கு வைத்து, யார் முன்னிலையில் சிபிஜோசப்பிடம் பணத்தை திருப்பி கொடுத்தார் என்றும், எந்த தேதியில் காசோலையை சிபிஜோசப்பிடம் கொடுத்தார் என்றும், எந்த தேதியில் காசோலையை சிபிஜோசப்பிடமிருந்து திருப்பி கேட்டார் என்பதை குறித்து எதிரி எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை.

10.12. இவ்வழக்கில் சிபிஜோசப் என்பவரை விசாரிப்பதற்கு எதிரி தரப்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேற்படி சிபிஜோசப் என்பவரை விசாரிக்கும்பட்சத்தில் உண்மை நிலவரம் தெரியவரும். ஆனால் சிபிஜோசப்பை விசாரிப்பதற்கு எதிரி தரப்பில் எவ்வித முயற்சிகளும் எடுக்காத காரணத்தினால் எதிரி தரப்பின் மீது சந்தேகம் எழுகிறது.

10.13. மேலும் எதிரி தரப்பு வாதத்தில், புகார்தாரருக்கு காசோலை தொகை கொடுக்கும் அளவிற்கு வசதி வாய்ப்பு இல்லை என்று கூறப்பட்டது. ஆனால் அதனை குறிப்பிட்டு எதிரி தரப்பில் எவ்வித பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை. புகார்தாரர் அவரது சாட்சியத்தில், பொருட்கள் வாடகைக்கு கொடுப்பதால் எப்போதும் கையில் பணம் வைத்திருப்பேன் என்றும், கவுன்சிலராக இருந்தேன் என்றும், நகையை கனரா வங்கியில் அடகு

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 12:28:24 +0530

வைத்துள்ளேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கில், எதிரி புகார்தாரருக்கு பதில் அறிவிப்பு அனுப்பாத நிலையிலும், புகார்தாரர் கவுன்சிலராக இருந்தும், பொருட்கள் வாடகைக்கு கொடுக்கும் வேலை பார்ப்பதாலும், புகார்தாரரரின் வசதி வாய்ப்பு குறித்து சந்தேகம் எழவில்லை என்று முடிவு செய்கிறது.

10.14. புகார் மனுவில், 28.07.2024 ம் தேதியன்று எதிரி புகார்தாரரின் வீட்டிற்கு சென்று கடன் வாங்கியதாக கூறும் நிலையில், மேற்படி தேதியன்று எதிரி புகார்தாரரை சந்திக்கவில்லை என்றும், வேறு இடத்தில் இருந்தார் என்பதை நிரூபிக்கும் வகையில் எவ்வித ஆவணங்களும், சாட்சிகளும் எதிரி தரப்பில் முன்னிறுத்தப்படவில்லை.

10.15. இவ்வழக்கில் காசோலை மற்றும் அதிலுள்ள கையொப்பம் எதிரியுடையதுதான் என்ற காரணத்தினாலும், காசோலையை புகார்தாரரிடம் கொடுக்கவில்லை என்று எதிரி தரப்பில் நிரூபிக்காத காரணத்தினாலும், சிபிஜோசப் என்பவரை விசாரிக்க எதிரி தரப்பில் எவ்வித முயற்சிகளும் எடுக்காத காரணத்தினாலும், எதிரி பணம் வாங்கியதாக சொல்லப்படும் தேதியன்று புகார்தாரரை சந்திக்கவில்லை என்பதை நிரூபிக்க எதிரி தரப்பில் எவ்வித முயற்சிகளும் எடுக்காத காரணத்தினாலும், எதிரி தரப்பின் எதிர்வாதத்தை நிரூபிக்கும் வகையில் வேறு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை அவரது தரப்பில் தாக்கல் செய்யாத காரணத்தினாலும், புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 118(a) மற்றும் பிரிவு 139 கீழான சட்டப்படி அனுமானங்களை எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் மறுக்கப்படவில்லை என்று முடிவு செய்கிறது. எனவே எதிரி புகார்தாரரிடம் வாங்கிய சட்டப்படியான கடனுக்கு ஆதரவாக தாவா காசோலையை புகார்தாரரிடம் கொடுத்துள்ளார் என்றும், காசோலை தொகையை எதிரி கொடுக்க கடமைப்பட்டவர் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 12:28:31 +0530

10.16. மேலே விவரிக்கப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் எதிரி மீது மாற்றுமுறை ஆவணசட்டம் பிரிவு 138–ன் படியான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

11. முடிவு:

முடிவாக எதிரி மீது பிரிவு 138 மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் குற்றவாளி என தீர்மானித்து இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

12.தண்டனை:

முடிவாக, எதிரி மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138–ன் கீழ் குற்றவாளி என்று முடிவு செய்து, எதிரிக்கு மாற்று முறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138–ன் கீழான குற்றத்திற்கு 3 மாதங்கள் மெய்க்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று பிரிவு 278(2)–ன் B.N.S.S கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் சொத்து எதுவும் தாக்கல் இல்லை.

13. குவிமுச பிரிவு 357–ன் கீழ் இழப்பீடு:

தாவா காசோலை தொகையை எதிரி புகார்தாரருக்கு 2 மாத காலத்திற்குள் பிரிவு 395(3) B.N.S.S–ன் கீழ் இழப்பீடாக செலுத்த வேண்டும், தொகை செலுத்த தவறினால் மேலும் கூடுதலாக எதிரி 1 மாதம் காலம் மெய்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் வருடம் மே மாதம் 29–ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 12:28:37 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், உத்தமபாளையம்.

1. <u>புகார்தாரர் தரப்பு சாட்சி:</u>

1	ம.சா.1	திரு.காசிமாயன் (புகார்தாரர்)

2. <u>புகார்தாரர் தரப்பு சான்றவணங்கள்:</u>

1	ம.சா.ஆ.1	25.09.2024 நாளிட்ட 256966 என்ற எண் கொண்ட பெடரல் வங்கி, புத்தடி கிளைக்குரிய ரூ.5,00,000/-க்கான காசோலை அசல்
2	ம.சா.ஆ.2	26.09.2024 நாளிட்ட வங்கி குறிப்புரை அசல்
3	ம.சா.ஆ.3	24.10.2024 நாளிட்ட சட்டஅறிவிப்பு அலுவலக அசல்
4	ம.சா.ஆ.4	23.11.2024 நாளிட்டு திருப்பப்பட்ட அஞ்சலக உறை அசல்

3. <u>புகார்தாரர் தரப்பு சான்றுபொருள்</u>: இல்லை

4. <u>எதிரி தரப்பு சாட்சி:</u>

1	எ.ம.சா.1	திரு.பிஜீ ஜான்

<u>5. எதிரி தரப்பு சான்றாவணங்கள்:</u>

1	எ.ம.சா.ஆ.1	எதிரி சிபி ஜோசப் என்பவர் மீது கொடுத்த புகார் மனு
2	எ.ம.சா.ஆ.2	எதிரி சிபி ஜோசப் என்பவர் மீது கொடுத்த புகாருக்கான ரசீது

<u>6. எதிரி தரப்பு சான்றுபொருள்:</u> இல்லை

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 12:28:44 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், உத்தமபாளையம்.